வடமொழியாக்கம், ஆங்கில எழுத்தொலியாக்கத்தில் தென்னூல்

Northern Translation, Tennool in English Transliteration

ச. சுபத்ரா
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

S. Subathra
University of Madras
Chennai

ஆய்வுச்சுருக்கம்

பாவலரேறு ச.பாலசுந்தரத்தினால் எழுதப்பட்டது தென்னூல் என்னும் இலக்கண நூலாகும். இது எழுத்திற்கும் சொல்லிற்கும் இலக்கணம் கூறுகின்றது. இந்நூல் வடமொழி, ஆங்கில எழுத்தொலியாக்கம் குறித்து விரிவானதொரு இலக்கணம் படைத்துள்ளது. தென்னூல் எடுத்துரைக்கும் வடமொழியாக்க மரபினையும், ஆங்கில எழுத்தொலியாக்கத்தினையும் விளக்குவது இக்கட்டுரை நோக்கமாக அமைகின்றது.

Abstract

Thennool is a grammar book written by Pavalare S. Balasundaram. It says grammar for writing and word. The book provides a comprehensive grammar of the Northern language and English transliteration. The purpose of this article is to explain the tradition of transliteration and English transliteration of the Thennool.

முக்கியச்சொற்கள்:

தென்னூல், இலக்கண நூல், வடமொழி, ஆங்கில எழுத்தொலியாக்கம், எழுத்து அடையாளங்கள்

Keywords:

Thennool, grammar, Northern language, English transliteration, written symbols

Citation

Subathra, S. “Northern Translation, Tennool in English Transliteration.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 1, 2021, pp. 32–41.

அயல்மொழி எழுத்தாக்க அடையாளம்

அயல்மொழி எழுத்தொலிகளைத் தமிழ் வரிவடிவாக்கம் செய்ய வேண்டி இரண்டு எழுத்து அடையாளங்களைக் கூட்டி ஓரடையாளமாக அமைத்தலும் சில ஒலிகளைச் சுட்ட துணையடையாளங்கள் பக்கத்தில் அமைத்தலும் உலகியல் வழக்காற்றின் கடப்பாடாகும் என்பதைப் பின்வரும் நூற்பா காட்டுகின்றது. கூட்டெழுத்தாகக் கொள்ளத்தக்கவை ன்க், ன்ச். இவற்றை ஒருங்கு இசைக்க முறையே என்ற ஒலிவரும். வடமொழி மூன்றாவது எட்டாவது மெய்களையும் ஆங்கிலம் ஏழாவது பத்தாவது எழுத்துக்களையும் இக்கூட்டெழுத்துக்களால் ஒலி பெயர்க்கலாம். ஏனைய சார்படையாளங்கள் ஆய்தமும் ஆய்தத்தின் இரண்டுபுள்ளி, ஒரு புள்ளியும், செங்குத்தான ஒருபுள்ளியாகவும் வடமொழி முப்பத்திரண்டாவதும் ஆங்கிலம் இருபத்தாறாவதும் ஒருபுள்ளி அடையாளம் பெறும். நைந்தகுற்றியலிகரம் குற்றியலுகரங்களைக் காட்ட வளைந்த புள்ளிக்கோடுகள் அடையாளமாக இடப்பெறும் என்கிறது.

அயல்மொழி ஒலிபெயர்ப் பாக்கம் வேண்டிக்
கூட்டெழுத் தமைத்தலும் துணையடை யாளம்
காட்டலும் உலகியல் கடப்பா டென்ப (87)

அயல்மொழி எழுத்தொலி தமிழாக்கம்

அயல்மொழி என ஈங்கு எடுத்துக் கொள்ளப்படுபவை ஆரிய வடமொழியும் (சம்ஸ்கிருதம்) ஆங்கிலமும் ஆகும். பிற அயல்மொழிகள் இவற்றிற்குக் கூறப்படும் விதிகளுள் அடங்கும் என்கிறது.

அயல்மொழி என்பவை ஆரியுவடமொழி
ஆங்கில மாம்பிற அவற்றியல் பேற்கும் (88)

ஆக்கவகை

அயல்மொழி எழுத்தொலிகளைத் தமிழ் ஒலி நெறிகேற்பத் திரித்துக் கொள்வது இலக்கியத்திற்குரிய வழக்காகும். அதனைத் திரிக்காமல் ஆண்டுள்ளவாறே தமிழ் வரிவடிவ எழுத்தாற் பெயர்த்துக் கொள்வது கலைத்துறை முதலிய உலகியல் வழக்காகும். ப்ரகாஷ், அலெக்ஸாண்டர், ஹிமாயூன் என்றாற் போல்வனவற்றைப் பிரகாசம், அழகுச்சாந்தர், குமாயன் என மாற்றுவது திரிந்துக் கொள்வதாகும். அடையாளத்தோடு கூடிய தமிழ் வரிவடிவ எழுத்துக்களால் எழுதிக் கொள்வது திரிக்காமல் கொள்வதாகும் என்கிறது.

அயல்மொழி ஒலியினைத் தமிழ்நெறிக்கேற்பத்
திரித்துக் கொள்வது இலக்கிய வழக்கு அதைத்
திரிக்காது அம்மொழி செவ்விதின் இசைக்க
ஒலிபெயர்த் தியற்றல் உலகியல் வழக்கே (90)

இயற்பெயர்கள், கலைச்சொற்கள் இவற்றின் பொருள் கவர்பு படாமைப் பொருட்டு ஒலிபெயர்ப்பாக்கம் செய்து கோடல் பெரும்பான்மையும் ஏற்கும். அன்றிச் செய்யுள் இலக்கியப் படைப்பிற்கு அம்முறை இழிவுதருவதாகும் என்கிறது.

இயற்பெயர் அறிவியற் கலைச்சொற் பெயர்ப்பிற்
கொலிபெயர்ப் பாக்கம் ஏற்குமன் செய்யுள்
இலக்கியப் படைப்பிற் கம்முறை இழிவே (91)

வடமொழியாக்கம்

தமிழில் வடமொழிக் கலப்பிருவகை ஒன்று ஆரியச் சொற்கலப்பு மற்றொன்று பழந்தமிழ்ச்சொல் ஆரியத்திற்குச் சென்று திரிந்த சொற்கலப்பு. ஆரியச் சொல்லின் திரிபு வடமொழி என்றும் பழந்தமிழ்ச் சொல்லின் திரிபு வடசொல் என்றும் வழங்கப்படும் வடசொல் தமிழ் மொழிக்குத் தாய உரிமையாகலின் அவை செய்யுளீட்டச் சொல் நான்கனுள் ஒன்றாகத் தமிழ் வடிவு பெற்றுத் திகழும் என வடமொழியாக்க மரபினைச் சுட்டுகின்றது.

ஆரியத் திரிபு பழந்தமிழ்த் திரிபென
தமிழிடை வடமொழிக் கலப்பிரு வகைத்தாங்கு
ஆரியத் திரிபு வடமொழி எனப்படும்
மற்றது தமிழ்க்குரித் தாய்வட சொல்லெனச்
செய்யுள் வழக்கினும் மெய்பெயத் திகழும் (92)

சான்று:

மாத்ரு, பித்ரு போன்றவை ஆரியச்சொல்: மாதா, பிதா என்பவை வடமொழி. சூரியன், ஆதி, அந்தம் போன்றவை வடசொல்.

ஆரியமென்னும் சமஸ்கிருத எழுத்துவகை

வடமொழியுள் அச்சென்றும் சுரமென்றும் வழங்கப்படும் உயிர் எழுத்துக்கள் பதினாறாகும். அல் என்றும் வியங்சனம் என்றும் வழங்கப்படும் மெய் முப்பத்தாறும் என்பர் நூலோர்.

ஆரிய மொழிக்குயிர் பதினா றாம் மெய்
முப்பத் தாறெனச் செப்புவர் நூலோர் (93)

உயிர்வரிசையுள் ஏழு முதல் பத்தும் இறுதி இரண்டும் மெய்வரிசையுள் கசடதப என்னும் ஐவருக்கங்களின் இடையே உள்ள பதினைந்தும் முப்பதுஒன்று முப்பத்திரண்டு முப்பத்துமூன்று, முப்பத்தைந்து, முப்பத்தாறு ஆகிய இருபத்தேழும் வடமொழிக்குச் சி றப்பெழுத்தாகும். ஏனைய இருமொழிக்கும் பொதுவாகும். எ, ஒ, ற, ன, ழ ஆகிய ஐந்தும் தமிழுக்குச் சிறப்பெழுத்தாகும் (94) என்கிறது.

வடமொழிச் சிறப்பெழுத்துக்களுள் ஏற்பவை தமிழ் மொழி மரபிற்கேற்பத் திரித்துக் கொள்ளப்படும் இரு மொழிக்கும் பொதுவானவை இயல்பாக அமையும் திரிக்கப் பட்டவை தற்பவம் என்றும் திரிக்கப்படாதவை தற்சமம் என்றும் வழங்கப்படும். திரிக்காமல் ஆண்டுள்ளவாறே கொள்ளப் பெறுவன ஒலிபெயர்ப் பெனப்படும். இவற்றைச் சிதைத்துக் கொள்வது பழைய மரபாகும் என்கிறார். ஹர - அரன் தற்பவம், சங்கு - தற்சமம் (பாஷ்யம்) பாஃச்யம் ஒலிபெயர்ப்பு. பாசியம் சிதைவு - விரிவுரை என்பது மொழிபெயர்ப்பு.

சிறப்பினுள் ஏற்பவை செந்தமிழ்க் கொப்பத்
திரிபுறும். பொது இயல்பாம். திரி புறுபவை
தற்பவம் எனப்படும் மற்றவை தற்சமம்
திரியாத் தற்பவம் ஒலிபெயர்ப் பாகும் (95)

இலக்கிய வழக்கில் மரபாக வரும் திரிபு முறைகள்

இலக்கிய வழக்கில் ஏழாம் உயிர் இ, இரு எனவும் ஐவருக்கத்தும் இடையிலுள்ள மூன்றும் அவ்வம் முதல் எழுத்தாகவும் வழங்கப்படும். அவற்றுள் எட்டாவது மெய் யகரமாகவும் திரியும். முப்பது ச, ய எனவும் முப்பத்தொன்று ச, ட எனவும் முப்பதிரண்டு ச, த எனவும் முப்பத்துமூன்று ய, க வாகவும் அதன்கண் உள்ள உயிராகவும் முப்பத்தைந்து இருககரமாகவும் ட்ச வாகவும் திரியும் ஏனைய எழுத்துக்கள் பயின்றுவாரா. சான்று: ஏழாம் உயிர் இடபம், இருடி விருத்தி எனவரும். ஐவருக்கத்துள் க. நகம், நாகம், மேகம். ச. சவி. பங்கசம், பங்கயம், சருச்சரை ட. பீடம், சடம், கடம். து. தலம், தனம், தரை. ப.பலம், பந்தம், பாரம். 30. சங்கரன், தேயம் 31. சண்முகம், விடம் 32. சபை, மாதம். 33. மோகம், மயிடம் இமம், ஏரம்பன், ஓமம். 35. பக்கம் - பட்சம். மோட்சம். எனத்தமிழ் ஒலிமரபிற்கேற்ப வரும் என்கிறார்.

இணைந்தியல் மெய்கள்

யரல என்னும் மெய்களோடு இணைந்தொலிக்கும் சொற்கள் அம்மெய்களின்மேல் அ இ உ என்பன ஏற்கும் வகையில் கூடியிசைக்கும். பிறவாறு இணைந்து வருவன திரிந்தும் மிக்கும் கெட்டும் நிற்கும்.

யரலவொ டிணைந்தியல் மெய்ம்மேல் அகர
இகர உகர மூர்ந் திசைத்தலும் பிறஇணை
திரிதலும் மிகுதலும் கெடுதலும் மரபே (97)

சான்று:

தோன்றல்	*திரிதல்*	*கெடுதல்*	*முதல் விகாரம்*	*இடை விகாரம்*
இரத்தினம்	*காப்பியம்*	*தூலம்*	*தியாகம்*	*வாக்கியம்*
அரதனம்	*சத்தி*	*ஞானம்*	*மிருகம்*	*வக்கிரம்*
சக்கரம்	*பருப்பதம்*	*சமர்*	*கிலேசம்*	*பதுமம்*

முதற்கண் வாராதனவற்றிற்கு முன்னொட்டுச் சேர்க்கும் முறைமை

வடமொழியில் யரல என்பவை முதலாக வரும் சொற்களுக்குப் பொருந்து மாற்றான் அ இ உ என்னும் உயிர்களை முன்னொட்டாகக் கூட்டி இசைத்தல் முறையாகும் ஏனை அயல் மொழிக்கும் இம்முறைமை பிழையாகாது என்பர். சான்று: இயக்கன், உயுத்தம், அரங்கன், இராமன், உரோமம், இலக்குவன், உலோபம், உருசியா, இலங்கை, இயேசு.

யரல முதன்மொழிக் கவ்வுயிர் மூன்றும்
முன்னொட் டாய்வரல் முறையாம் இவ்விதி
பிற அயல் மொழிக்கும் பிழையன் றென்ப (98)

வடமொழியில் ஆகார ஈற்றுச் சொற்கள் சில ஐகார ஈறாகவும் ஈகார ஈறு இகரமாகவும் பெரும்பான்மையும் திரிந்து வரும் பிற விகாரங்களும் அவ்வாறேயாம் என்று பிற மரபுகள் என்னும் தலைப்பில் இலக்கணம் கூறுகின்றார். சான்று: தரா - தரை, துலா - துலை, புரீ - புரி, சானகீ - சானகி (99).

தீரிக்காமல் அவ்வாறே ஒலிபெயர்த்தல்

வடமொழிச் சிறப்பெழுத்துக்கள் ஆங்கு உள்ளவாறே தமிழெழுத்தக்களால் ஒலிபெயர்த்துக் கூறுமிடத்து உயிருள் ஏழும் எட்டும் ஒன்று அல்லது இரண்டு ரகர ஒற்றுடன் குறுகிய இகர உகரமும் உயிர் உகரமும் கூடியும், ஒன்பதும் பத்தும் முறையே லு லுஎனவும் பதினைந்தாவது மகரக்குறுகமாகவும் பதினாறாவது ஆய்தக்குறுக்கமாகவும் அமைந்துவரும். (15, 16 க்குரிய குறியீடு ஆங்குளவாறேயாம்) - மெய்யுள் ஐந்து வருக்கத்தினும் முதல் இரண்டெழுத்துக்கள் முறையே கசடதப என்பவற்றானும். இனி மூன்றும் நான்கும் ன்க் என்னும் கூட்டொலியானும் எட்டும் ஒன்பதும் ன்ச் என்னும் கூட்டொலியானும் ஒலிக்கும், னக னச என்பவை (ன்க்ன்ச்) கூட்டெழுத்தாகும். அவற்றுள் இரண்டாவதற்கும் நான்காவதற்கும் வேறுபாடு தெரிய அவற்றின் முன் ஒரு செங்குத்தான புள்ளியடையாளம் வரிவடிவில் அமையும் என்கிறார் (100).

பிற மரபுகள்

மெய்யுள் பதின்மூன்றும் பதினான்கும் அரை ஆய்த ஒலியொடு கூடியடகரத்தான் இசைக்கும் (நூ.101). பதினெட்டும் பத்தொன்பதும் அரை ஆய்தத்தொடு கூடிய தகரத்தான் இசைக்கும் (102). இருபத்து மூன்றும் இருபத்து நான்கும் அரை ஆய்தம் கூடிய பகரத்தான் இசைக்கும் (103). முப்பதாவது மெய் அரை ஆய்தந் தொடர்ந்த உரசிய மூச்சொலி சகரத்தானும் முப்பத்தொன்று முற்றாய்தம் தொடர்ந்த மூச்சொலி சகரத்தானும் முப்பத்திரண்டாவது கால் ஆய்தம் கூடிய மூச்சொலி விரவிய சகரத்தானும் இசைக்கும் இவை மூன்றும் மூச்சொலி விரவியவை என்கிறது தென்னூல்.

முப்பது செம்பால் ஆய்தந் தொடர்ந்த
சகரத் துரசொலி யானும் மேலொன்று
முற்றாய் தந்தொடர் சகரத் தானும்
இரண்டு காலாய்தம் தொடர்ந்த மூச்சொலி
விரவிய சகரத் தானும்நன் கிசைக்கும் (104)

முப்பத்து மூன்றாவது அரையாய்தம் சார்ந்த ககரத்தான் உயிர்ப்பிசையாக வரும் (105). சான்று: : கம்: சம், :கர, :கரி, :கிமாசலம், :குமாயூன், :கொரால்:டு எனவரும். முப்பத்தைந்தாவது மெய் க்ச, ட்ச எனப்பொருந்து மாற்றான் வரும். சான்று: க்சமா, அட்சரம் எனவரும் (106). முப்பத்தாறாவது மெய் க்ஞ என ஒலிக்கும். சான்று: ஆக்ஞா (107). எஞ்சிய ங ஞ ண ந ம ய ர ல வ ள எ என்னும் பத்தும் உள்ள வாறிசைத்து ஒலி ஒப்புரவாகும் (108).

ஆங்கில எழுத்தொலியாக்கம்

அசைமுறையாக நிகழும் ஆங்கில இசைஒலி எழுத்துக்களுள் பொது ஒலி பதினைந்து சிறப்பொலி பதினொன்றாகும் (109).

பொது: யு ஊ நு ஐ மு டு ஆ மீ ழு க சு வு ரு ஏ று
சிறப்பு: ழ னு கு பு ர் து ஞு ளு ஓ லு ணு

பொது எழுத்தொலிகளுள் உயிர்ப்பிசையான் நிகழும் 1, 5, 9, 15, 21 ஆகியவை முறையே 1. அஆ எஏ 5 இஈ எஏ 9. இஐ 15 அஆஉ ஒஓ 21. அவயு என்பனவற்றான் அச்சொல் முறைக்கேற்பப் பெரும்பான்மையும் இசைக்கும் (110).

பொதுவினுள்

உயிர்ப்பிசை யான்நிகழ் ஒன்றைந் தொன்பது
பதினைந் திருபத் தொன்றவை முறையே
அஆ எஏ இஈ எஏ
இஐ, அஆஉ ஒஓ அவயு
என்பவற் றான்இசை நிறைக்கும் மன்னே (110)

ஒற்றிசையுள் மூன்றாவது சகரமாகவும் ககரமாகவும் பதினொன்றாவது ககரமாகவும் பன்னிரண்டாவது ளளவாகவும் பதின்மூன்றாவது மகரமாகவும் பதினான்காவது ணநணவாகவும் பதினாறாவது பகரமாகவும் பதினெட்டாவது ரகரமாகவும் இருபதாவது டகரமாகவும் இருபத்திரண்டும் மூன்றும் வகரமாகவும் ஒத்திசைக்கும். பன்னிரண்டாவது மொழி முதற்கண் லகரமாகவும் இடையிறுதிகளில் ளகரமாகவும் பதினான்காவது மொழி முதற்கண் நகரமாகவும் இடையிறுதிகளில் ணணவாகவும் இசைக்கும் 11, 23 சில இடங்களில் மொழி முதற்கண் ஒலிபெறாது நிற்கும் நெகிழ்வு சாய்வுகளை அறிந்து கொள்ள வேண்டும் என்கிறது தென்னூல் (111).

ஆங்கிலச் சிறப்பொலி எழுத்துக்களுள் ஏழாவது ன்க், ன்ச் என்னும் கூட்டொலிகளானும் பத்தாவது ன்ச் எனும் கூட்டொலியானும் பதினேழாவது க்ய க்வ என்னும் இணைகளானும் இருபத்து நான்காவது க்ச் என்னும் இணைகளானும் இசைப்பதற்கேற்பனவாகும் (112).

சிறப்பினுள்
ஏழ்னக னசவினும் பதுனச வானும்
பதினேழ் கயவவும் இருபா னான்கு
கசவினும் இசைப்பதற் கேற்பன வாகும் (112)

ஆறாம் எழுத்து ஆய்தத்தொடு கூடிய பகரத்தானும் 2 4 8 19 ஆகியவை முறையே ப ட க ச என்பவற்றின் முன் அரை ஆய்தம் சார்ந்தும் இருபத்தைந்தாவது இயஎ என்பவற்றானும் இருபத்தாறாவது காலாய்தம் சார்ந்த உரசொலி சகரத்தானும் இசைக்கும். பிற என்றதனான் அவற்றின் உச்சரிப்புக் கோணங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்கிறது தென்னூல் (113). ர் சில இடங்களில் அகர இசைபெறுதலும் இருபந்தைந்தாவது இடை இறுதிகளில் இகர இசையும் யகர இசையும் பெறுதலைக் காணலாம்.

சான்று:

ர்ழுமீகுசு - ஆனர், ர்ழுருசு - அவர், ழயுழலு - :ப : பி பேபி, ழழுலு - ஃபாய்

புள்ளிமெய் மொழி முதலாகவும் மொழியிறுதியாகவும் வரும் அயல்மொழிக்கண் வரும் நுண்ணிய இகர உகர ஒலிகளை நைந்த குற்றியலிகரம் குற்றியலுகர ஓசைகள் இசைக்கும். அவற்றிற்கு வரிவடிவ அடையாளம் வளைவுறு புள்ளியாகும்.

புள்ளிமுத லீறா வருமயல் மொழிக்கண்
குறுகியல் இஉ நைந்திணைந் திசைக்கும்
வளைவுறு புள்ளி வரிக்குறி யீடாம் (114)

அயல்மொழிச் சொல்லாக்கத்தின்கண் வல்லொற்றுக்களும் ஙகரமும் மொழிமுதற்கண்ணும் ஈற்றின் கண்ணும் வருதல் பிழையாகாது. ஆண்டுக் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் மாத்திரை குறைந்துநைந்து விடுப்போசையாக வந்து முடிக்கும் என்கிறது (115). ஆங்கில எழுத்தொலிக்கும் ஒப்புமையாகக் காட்டிய தமிழ் வரிவடிவங்கள் தனியெழுத்தை உணர்வதற்கேயாம். சொற்களைக் கூறும் முறையில் அமையும் அசைத்திரிபிற்கு வட்டெழுத்துக்கட்குக் கூறிய வடிவங்களுள் ஏற்புடையனவற்றைப் பயன்படுத்தல் வேண்டும்.

ஆழவழைண - மோஃசன், ளுவயவழைண - ச்சேடஃசன், ஊரடவரசந - கல்ச்சர்

முழெற- நோ, றுசழபெ - றாங் என அவ்வுச்சரிப்பிற்கேற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தல் வேண்டும். எவ்வாற்றானும் மொழிபெயர்க்க இயலாதபயன்மிகு கலைச்சொற்கள் ஒருசார் இயற்பெயர்கள் அறிவியற் குறியீட்டுச் சொற்கள் ஆகியவை தவிர்ந்தவற்றைத் தமிழ்மொழி மரபிற்கேற்ப மொழிபெயர்த்துக் கொள்ளாமல் ஒலிபெயர்த்து அமைப்பது நல்லறிவாளர்க்கும் மொழிக்கும் இழிவையும் பழியையும் தரும் என்கிறார் நூலாசிரியர்.

தொல்காப்பியத்தில் எடுத்தாளப்பட்டுள்ள சமஸ்கிருதச் சொற்கள் பின்வருமாறு:

எழுத்து அதிகாரம்:

உவமம், காலம், காரம், காயம், திசை, பூதம், பூதன், மதி, ஆசிரியர், இமை, உரு, உருவு, துணி

சொல் அதிகாரம்:

அத்தம், ஆனை, இலக்கணம், உவமம், கருமம், களம், காரணம், திசை, தெய்வம், பூதம், சுண்ணம், வண்ணம்

பொருள் அதிகாரம்:

அத்தம், அந்தரம், அம்போதரங்கம், அமரர், அமுதம், அவை, ஆரம், உலகம், உவமம், உரு, ஏது, கபிலை, கரகம், கருமம், கரணம், காமம், காயம், காரணம், காலம், குணம், குஞ்சரம், சிந்தை, சின்னம், சூதர், தாரம், திசை, தூது, தெய்வம், நாடகம், நிமித்தம், பழி, பருவம், பலி, பூதம், மங்கலம், மண்டிலம், மந்திரம், மதி, மாயம், மானம், முகம், முரசு, வருணன், வள்ளி, வாணிகம்

மேலும் தொல்காப்பியத்தில் வடமொழியாக்கத்திற்கான நூற்பாக்கள் இல்லெனினும் வடமொழி குறித்த நூற்பா, இலக்கியத்தில் எடுத்தாளப்படுகின்ற நால்வகைச் சொற்களுள் வருவதைக் காணமுடிகின்றது.

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே (884)
சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் (885)

வடமொழிச் சொற்களிலுள்ள வடமொழிக்கேயுரிய ஓசையுடைய ஒலிகளை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்தாமைந்த சொல்லாக்கித் தமிழில் எடுத்தாளப்படுவது வடசொல்லாகும் என்கிறது தொல்காப்பியம். தமிழில் வந்து வேறுபாடறியப்படாது கலக்கும் அனைத்துப் பிறமொழிச் சொற்களுக்கும் இது பொருந்தும் என்கிறது. அவ்வடசொற்கள், பலதிரிபு மாற்றங்கட்குட்பட்டுத் தமிழ் வடிவம் பெற்றுத் தமிழில் வந்து கலப்புறும்போது தமிழுக்கு இயைபுடையனவற்றை, நீக்கமாட்டார்கள். வடசொல்லுக்குக் கூறப்படும் இவ்விலக்கணம் பிறமொழிச் சொற்களனைத்திற்கும் பயன்படும் என்கிறார் தொல்காப்பியர்.

தொல்காப்பித்திற்குப் பின்னர் வந்த நன்னூல் வடமொழியாக்க மரபினை, ஆரியமொழி தமிழில் வடமொழியாதல், ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்பு விதி, தமிழெழுத்தின் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும் என்ற தலைப்புகளில் ஐந்து நூற்பாக்களில் விளக்குகின்றது (146-150).

தொல்காப்பியம் வடமொழி குறித்து ஒரு சில நூற்பாக்களில் இலக்கணம் வகுக்க, நன்னூல் ஐந்து நூற்பாக்களில் இலக்கணம் வகுக்கின்றது. தற்கால இலக்கண நூலான தென்னூல் வடமொழியாக்க மரபினைத் தொல்காப்பியம், நன்னூலிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, தெளிதின் தெளிவாக, ஆழமாக விளக்குகின்றது. எந்த ஒரு இலக்கண நூற்களும் பதிவு செய்யாத ஆங்கில எழுத்தொலியாக்க மரபுகளைப் பதிவு செய்து காலத்தின் தேவையினைப் பூர்த்தி செய்து இலக்கணம் வகுத்த பாங்கினை அறிய முடிகின்றது. வேற்று நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், வாணிபம் போன்ற காரணங்களால் நமது மொழியில் பல மொழிகள் உட்புகலாயின. இவ்வாறு புகுந்த சொற்களால் தமிழ் மொழியில் மொழி கலப்பு ஏற்பட்டது. இதனால் ஒலிபெயர்ப்பும், மொழிபெயர்ப்பும் வளர்ந்தன. கால மாற்றம், வளர்ச்சியினை நன்குணர்ந்த தென்னூலானது வடமொழியாக்கத்தினையும், ஆங்கில எழுத்தொலியாக்கத்தினையும் தெளிவுற விளக்கி மற்ற இலக்கண நூற்களுக்கு முன்னோடி நூலாகவும், தற்கால இலக்கணக் கோட்பாடுகளை வெளிக்காட்டும் இக்கால இலக்கண நூலாகவும் திகழ்கிறது என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

துணைநின்ற நூற்கள்

1. *இளம்பூரணர் (உ.ஆ.,). (1958). தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், சென்னை, கழக வெளியீடு.*
2. *இளம்பூரணர் (உ.ஆ.,). (1963). தொல்காப்பியம் - சொல்லதிகாரம், சென்னை, கழக வெளியீடு.*
3. *இளவரசு, சோம. (ப.ஆ.,). (1990). நன்னூல் - விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்,*
4. *குணவீர பண்டிதர். (1956). நேமிநாதம். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.*
5. *கோவிந்தராச முதலியார். (1973). நேமிநாதம், கா.ரா.(கு.உ.,) சென்னை, கழக வெளியீடு.*

6. *சங்கர நமச்சிவாயர். (1991). நன்னூல் - விருத்தியுரை, (உ.ஆ.,) சென்னை, உ.வே.சா. நூல் நிலையம்.*
7. *சண்முகம். செ.வை. (1975). சுவாமிநாதம். (ப.ஆ. ரு உ.ஆ.,), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், மொழியியல் துறை வெளியீடு.*
8. *சரவணத்தமிழன், த. (1996). தமிழ்நூல், திருவாரூர், தமிழன் பதிப்பகம், இயற்றமிழ்ப் பயிற்றகம்.*
9. *சுந்தர மூர்த்தி, கு. (ப.ஆ.,). (1972). முத்துவீரியம், திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.*
10. *சுப்பிரமணியம், ச.வே. (1978). தொன்னூல் விளக்கம், அடையாறு, சென்னை, தமிழ்ப் பதிப்பகம்.*
11. *தண்டபாணிசுவாமிகள். (1990). ஏழாமிலக்கணம், பூவை. தஞ்சாவூர், கலியாண சுந்தரமுதலியார் பதிப்பு, இந்து தியாஜிகல் யந்திர சாலை.*
12. *தண்டபாணிசுவாமிகள். (1991). அறுவகை இலக்கணம், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.*
13. *தமிழண்ணல். (2006). தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.*
14. *தமிழண்ணல். (2006). தொல்காப்பியம் சொல்லதிகாரம், சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.*
15. *தமிழன், த.ச. (1996). தமிழ்நூல், திருவாரூர், தமிழன் பதிப்பகம்.*
16. *தாமோதரம் பிள்ளை, வீரசோழியம். (ப.ஆ.,). (2008). உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.*
17. *நாகராசன், ப.வெ. (1991). அறுவகை இலக்கணம், (ப.ஆ., உ.ஆ.,) தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.*
18. *பாலசுந்தரம், ச. (1991). தென்னூல், தஞ்சாவூர், தாமரை வெளியீட்டகம்.*
19. *மயிலைநாதர் (உ.ஆ.). (1995). நன்னூல் - விருத்தியுரை, சென்னை, உ.வே.சா. பதிப்பகம்.*

References

1. Ilampuranar. (1958). *Tholkappiyam - Ezhuthathigaram*. Chennai, Kazhaga Veliyidu.
2. Ilampuranar. (1963). *Tholkappiyam - Sollathigaram*. Chennai, Kazhaga Veliyidu.
3. Ilavarasu, S. (1990). *Nannool - Viruthiyurai*. Annamalai University, Annamalai Nagar.
4. Gunaveera Pandithar. (1956). *Neminatham*. Tirunelveli, Saivasittantha Noorpathippu Kazhagam.
5. Govindarasa Mudaliar. (1973). *Neminatham*. Chennai, K.R., Kazhaka Veliyidu.
6. Sankara Namachchivayar. (1991). *Nannool - Viruthiyurai*, Chennai, U.Ve.Sa. Nool Nilayam.
7. Shanmugam, S.V. (1975). *Swaminatham*. Annamalai University, Annamalai Nagar, Mozhiyiyal Thurai Veliyidu.
8. Saravanathamizhan, T. (1996). Tamil Nool, Thiruvarur, Tamizhan Pathipagam, Iyarthamil Payitragam.

9. Sundara Murthy, K. (1972). *Muthuveeriyam.* Tirunelveli, Saivasittantha Noorpathippu Kazhagam.
10. Subramaniam, S.V. (1978). *Thenool Vizhakkam.* Adyar, Chennai, Tamil Pathippagam.
11. Dantapaniswamygal. (1990). *Ezhamilakkanam, Poovai.* Hindu Theogical Yantra Salai, Thanjavur, Kaliyana Sundaramudaliyar Pathippu.
12. Dhantapaniswamygal. *Aruvagai Ilakkanam,* Thanjavur, Tamil Palgalaikkazhaga Veliyidu.
13. Tamizhannal. (2006). *Tolkappiyam Ezhuththathikaram.* Chennai, Manivasakkar Pathippakam.
14. Tamizhannal. (2006). *Tolkappiyam Sollathikaram.* Chennai, Manivasakkar Pathippakam.
15. Tamizhan, T.S. (1996). *Tamilnool.* Thiruvarur, Tamizhan Pathippagam.
16. Damodaram Pillai. (2008). *Veerasozhiyam.* Chennai, World Tamil Research Institute.
17. Nagarajan, B.V. *(1991). Aruvagai Ilakkanam.* Thanjavur, Tamil University.
18. Balasundaram, S. (1991). *Thennool.* Thanjavur, Thamarai Veliyitagam.
19. Mayilainathar. (1995). *Nannool - Viruttiyurai.* Chennai, U.Ve.Sa. Pathippagam.